# அழகு

*நிலவின் இருப்பு மற்றும் அதன் சுழற்சிகளினால் மட்டுமல்ல, ஆனால் அதன் அழகினாலும் மனிதர்கள் வசீகரிக்கப்படுகின்றனர். நிலவானது, மாதங்கள் மற்றும் பருவங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துகின்ற பயன்பாட்டு நோக்கில் பணி புரிகின்றது, மற்றும் இது பூமியில் வாழ்பவர்களுக்கு ஒரு அழகியல் நோக்கிலும் பணிபுரிகின்றது. நெருங்கி நோக்குகையில் அது பயன்பாட்டிற்குரியதோ அல்லது அழகுள்ளதோ அல்ல என்பது உறுதி, ஆனால் 2 1/2 இலட்சம் மைல்களுக்கு அப்பாலிருந்து அதன் மஞ்சள் பிறை அல்லது வெள்ளை முழு வட்டமானது ஒவ்வொருவருக்கும் சிறப்பாக, காதலர்களுக்கு ஏதோ ஒன்றைச் செய்யும் சுடரொளியாக உள்ளது. நிலவை உண்டாக்கியவர் தம் சிந்தையினுள் பூமியில் வாழ்பவர்களுக்காக செயல்முறைக்குரியவைகள் மற்றும் அழகியலுக் குரியவைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தாரா?*

*ஒருவர் தம் கண்களை நிலவிலிருந்து திருப்பி, ஒரு ரோஜாவை ஆராய்கையில், பல கேள்விகள் எழுகின்றன. அது (ரோஜா) எப்படி வந்து சேர்ந்தது? அது எவ்விதம் அவ்வளவு சீரான உருவம் பெற்றது, அழகிய வண்ணம் பெற்றது மற்றும் சுகந்தமான வாசனையூட்டப்பட்டது? செயல்முறை மதிப்பெதுவும் இல்லையென்றால், ரோஜாவை உண்டாக்கிய வர் அழகிய பொருட்களுக்கு ஒரு மதிப்புரை பெற்றிருந்தாரா? அவர் மனிதர்களுக்குள் அதற்கிணையான, சீர்த்தன்மை, வண்ணங்கள் மற்றும் சுகந்த நறுமணம் ஆகியவை பற்றிய மதிப்பின் உணர்வை வைத்தாரா?*

*அழகு நிறைந்த பொருட்களை ஒருவர் அட்டவணைப் படுத்தத் தொடங்கினால், அவர் களைப்புற்று விடுகின்றார். விர்ஜீனியாவின் ஷெனன்டோஹ் பள்ளத்தாக்கின் ஆப்பிள்கள் பயன்பாட்டுப் போஷாக்காவதற்கு நீண்ட நாட்கள் முன்னதாக, மலர் மலரும் பருவத்தில் அந்தப் பள்ளத்தாக்கானது ஓவியர் ஒருவரின் கற்பனையையும் கடந்து நிற்பதாய் விளங்குகிறது. மேலும் வசந்த காலத்தில் கற்பாறையால் ஆன மலைகள், சுரங்கத் தொழில் மற்றும் பண்ணைத் தொழில் ஆகியவற்றை விட அதிகமான சிலவற்றை கொண்டுள்ளன. கடலில் சூரிய உதயமானது இன்னொரு புவிப் புரட்சியை விட அதிகமானது ஆகும்.[1] நைட்டிங்கேல் பறவையின் பாடல்கள், வயலட் மலர்களின் நறுமணம், ஒரு நண்பரின் புன்னகை மற்றும் அன்புக்குரிய ஒருவரின் கண்ணில் தோன்றும் ஒரு சுடரொளிப் பார்வை: இவை ஒவ்வொன்றும் விளக்கிக் கூறக் கடினமான ஆனால் அன்பும் உண்மையுமாய் உள்ள வசீகரத்தைக் கொண்டுள்ளன.*

*“மனிதர் தம்முள் அழகியல் தூண்டுதலைப் பெற்றுள்ளனர், இது தனிநபருக்குத் தனிநபர் அளவில் மாறுபட்டாலும் எல்லா மக்களின் மத்தியிலும் மாறுபட்ட வெளிப்பாடுகளில் தோற்றம் அளிக்கின்றது.”[2]*

*F. R. டென்னன்ட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *தொலைநோக்கி மற்றும் நுண்ணோக்கி ஆகியவற்றின் அளவுகோலில், விண்மீன்கள் நிறைந்த ஆகாயத்திலிருந்து இரட்டை அணுவின் வெளிப்புற மென்பரப்பு வரை அதன் உள்ளான பாகங்கள் மற்றும் மேற்பரப்பு ஆகியவையும், மலர் களின் "காணப்படாத ஒளிக் கசிவும்" மற்றும் "பெருங்கடல் கொண்டுள்ள ஆழம் காணா குகைகளும்" காணப்படுகின்றன, இவை இயற்கை எழில் நிறைந்தது அல்லது அழகு வாய்ந்தது மற்றும் ஆராய்ச்சிகள் யாவும் விதியை ரூபிக்கின்றதை உணர்த்துகின்றன.*[3]

*பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் ஆகிய இருவருமே அழகைப் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டனர். "அழகியல் தீர்ப்பின்மீது விமர்சனம்" என்ற தலைப்பில் இம்மானுவேல் கான்ட் ஏராளமான பக்கங்களை எழுதினார், அதில் அவர் "சுவையின் தீர்ப்பு" என்பது "புரிந்து கொள்ளுதல் அல்லது தர்க்க ஆராய்வு" என்பதில் இருந்து கூர்மையாக வேறுபடுத்தப் படுவதாகக் காண்பித்தார்.*[4] *ஹியுமிற்குச் சற்றும் குறைவுபடாத வகையில் கான்ட்டும் கூட சுத்த அறிவுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்திருந்தார். டேவிட் ஹியூமைக் காட்டிலும் அதிகமாக இவர் (கான்ட்), "உள்ளான ஒழுக்க விதி" என்பதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார். ஒருவேளை, அழியக் கூடிய வேறு எவரையும் விட அதிகமாக இந்த கான்ட் என்பவர் "விண்மீன்கள் நிறைந்த வானங்களின்" அழகினால் மயக்கப்பட்டிருந்தார்.*

*வாழ்வு உண்மையானதாக உள்ளது, மற்றும் அழகு உண்மையானதாக உள்ளது. இவ்விதமாக, இவைகளைச் சிருஷ்டித்தவர் உயிருள்ளவராகவும் அழகுணர்வுள்ளவராகவும் இருக்க வேண்டும் என்பது தர்க்கப் பொருத்த முடையதாக உள்ளது. மனிதர்கள் மட்டுமே அழகிற்கு இணையாக இருக்கக் கூடிய புரிந்தறியும் திறன் கொண்டுள்ளனர் என்பது உறுதி. ஆபர்ன் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராக உள்ள வில்லியம் H.டேவிஸ் அவர்கள், "அலங்கரித்துக் கொள்ளும் ஒரே விலங்கு மனிதன் மட்டுமே, மற்றும் எல்லா மனிதர்களும் இதை செய்கின்றனர்" என்று கவனித்துள்ளார். அழகுக் கலை அல்லது விருப்பத்திற்குரிய பொருட்களுக்கு நடைமுறை மதிப்பு எதையும் வழங்குவது வழக்கம் அல்ல; ஆனால் அழகில், "நமது தீர்ப்பில் உள்ள நோக்கங் கொள்ளுதல் உள்ளது, இது நோக்கமே அல்ல என்று குறிப்பிடப்படுகின்றது" என்று கான்ட் கூறினார்.*[5] *அழகின் இருப்பு பற்றியோ அல்லது அதன் மதிப்பு பற்றியோ விளக்கம் அளிப்பதில் தேவனை நம்புபவருக்கு எவ்வித பிரச்சனையும் இருப்பதில்லை, ஆனால் - "வலிமையுள்ளதே உயிர் பிழைக்கும்" என்ற கோட்பாட்டின் நுகம் சுமத்தப்பட்ட - ஒரு பரிணாமக் கொள்கைக்காரர் தம்மால் ஒன்றும் கூற முடியாதிருப்பதைக் காண்பார். பரிணாமக் கொள்கையாளரான தாமஸ் H. ஹக்ஸ்லீ தனது சிரமம் பற்றி மிக நேர்மையுடன் பின்வருமாறு கூறினார்:*

> *தீயன காணும் கொள்கைக்கு எதிராக என்னால் மதிக்கப் படுவதும், இந்த அண்டத்தின் அன்பார்ந்த படைப்பாளருக்கு நான் கூறிக்*

> கொள்ளுவதும் என்னவென்றால், காட்சியிலும் இசையிலும் எனக்கு உள்ள மகிழ்வான அனுபவமே ஆகும். அவைகள் இருப்பிற்கான போராட்டத்தில் எவ்வகையில் உதவியுள்ளன என்பதை நான் காண்பதில்லை. அவைகள் விலைமதிப்பற்ற வெகுமதிகளாகும்.[6]

கற்றுத் தேர்ந்த மற்றும் மொழியாற்றலுள்ள தத்துவ ஞானியான டென்னன்ட் என்பவர், "சில மனிதர்கள் அழகிய வாசல் வழியாக அவரது ஆலயத்தில் பிரவேசிக்கின்றனர்" என்று கூறினார். அவர், அழகு என்பதை ஆத்திகத்தின் திடமான தூண்களில் ஒன்றாக அட்டவணைப்படுத்தத் தயங்கவில்லை.

> இயற்கை அழகின் உலகளாவிய தன்மையானது - அழகு என்பது எல்லாருக்கும் ஒன்றுபோலவே உள்ளதென்றும் உள்ளாக இருப்ப தென்றும் உள்ளதுபோலப் பேசினால் - இயற்கை விதியின் சீர்த்தன்மையுடன் தோராயமாக ஒப்பிடுகையில் ஒரு பொதுமைப் படுத்துதலாகவே இருக்கின்றது. அழகியல் உணர்வைத் தட்டி யெழுப்பும் அந்த இயற்கைப் பொருட்களைப் போலவே, அவ்வுணர்வும் உண்மையானதாகவே உள்ளது, ஏனெனில் அவை இயக்க விதிகளுக்கு கீழ்ப்படிகின்றன அல்லது அப்பொருட்கள் சில இரசாயனப் பொருட்களின் சேர்க்கையாக உள்ளன.

''தேவன் நாட்டை உண்டாக்கியிருந்தாரென்றால்'' மற்றும் ''மனிதன் நகரத்தை உண்டாக்கியிருந்தான் என்றால், ... இவை யாவற்றிற்கும் நாம் சாத்தியமான ஒரு விளக்கத்தைக் கொண்டுள்ளோம், ஆனால், இந்தக் கூற்றில் அடங்கியுள்ள ஆத்திகமானது மறுக்கப்படுமென்றால், விளக்கம் எதுவும் அடுத்து வருவதாகக் காணப்படுவதில்லை."[7]

---

குறிப்புகள்

[1]கடலில் சூரிய உதயம் பற்றிய அறிவியல் விளக்கமானது விரும்பக் கூடிய ஒன்றை விட்டுச் செல்லுகின்றது: "பூமியானது அதன் விளிம்புத்தளம் மீண்டும் ஒருமுறை சூரிய விளிம்புடன் ஒத்திருக்கும் வரையிலும் சூழற்சி மேற் கொள்கின்றது." [2]Loren Eiseley, *The Immense Journey* (New York: Random House, 1962), 65. [3]F. R. Tennant, *Philosophical Theology* (Cambridge: University Press, 1930; reprint, 1956), 2:91-92. [4]Immanuel Kant, "Critique of Judgement," in *Kant Selections*, ed. Theodore Meyer Greene (New York: Charles Scribner's Sons, 1957), 387. [5]Ibid., 408. [6]Thomas H. Huxley, *Collected Essays*, vol. 2, *Darwiniana* (Westport, Conn.: Greenwood Publishing Group, 1970), 478. [7]Tennant, 2:91-92.